# ஆனந்த சாகரம்



## அமரர் உமாபதி கந்தசாமி

அவர்களின் நினைவாக

12.01.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



அவனியில்: 31.10.1923

ஆனந்த சாகரத்தில்: 12.12.2002

சீர் மேவு சித்ரபானு ஆண்டதனில்
கார்மேக கார்த்திகை திங்களதில்
ஊர் போற்ற வாழ்ந்த கந்தர்- பூர்வபக்க அட்டமியில்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. உமாபதி கந்தசாமி அவர்களின் வாழ்க்கை வரலாறு

இவர் கந்தர்மடத்தை சேர்ந்த திரு. உமாபதி அவர்களுக்கும் ஐயனார் கோவிலடியை சேர்ந்த திருவாட்டி நாகேஸ்வரிக்கும் 31.10.1923ம் ஆண்டு ஏக புத்திரனாக பிறந்தார். சிறுவயது முதலே இறை பக்தியும் நற்குணமும் கொண்டவராக இருந்தார்.

தனது ஆரம்ப .கல்வியை யாழ் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையிலும் பின்னர் யாழ் பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார். அரசசேவையில் சிறப்பராக சேர்ந்து உணவுத் திணைக்களம், பொது வேலைகள் திணைக்களம், சுங்கத் திணைக்களம், புகையிரத திணைக்களம், தேசிய வீடமைப்புத் திணைக்களம் போன்றவற்றில் சேவை செய்து ஓய்வு பெற்றார்.

சிறு வயதிலேயே சமய தீட்சை பெற்று ஆசார சீலராக சிவபூசை செய்து பக்தி நெறியுடன் வாழ்ந்தார். இவருக்கு திரு.இராமச்சந்திரா ஐயா அவர்களின் தொடர்பு கிடைத்தது. இவரது வாழ்க்கையின் பெரும் பேறாகும். ஐயா அவர்களின் தொடர்பால் சுவாமி இராமதாசர், மாதாஜீ, கவியோகி சுத்தானந்த பாரதி, சுவாமி சிவானந்தர், கொழும்புத்துறை யோகசுவாமிகள், சுவாமி சச்சிதானந்தா, போன்றோரின் அருள் கடாச்சம் பெறும் வாய்ப்புகிட்டியது. திரு. ராமச்சந்திரா ஐயா அவர்கள் ஆத்மசிந்தனை உள்ள அனைவருக்கும் ஒரு கலங்கரை விளக்காக, நல்வழிப்படுத்துபவராக இருந்தார். ஐயா அவர்களின் தொடர்பு கிடைக்காவிட்டால் நாங்கள் என்ன வாகிப் போய் இருப்போமோ என்று ஐயாவின் தொண்டர்கள் சொல்வார்கள். இப்படி பல மகான்களின் தொடர்பால் வாழ்க்கை மேலும் மேலும் புடம் போடப்பட்டதாகியது.

இவர் அரச சேவையில் பல திணைக்களங்களில் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தமையினால் அத்திணைக்களங்களின் தலைவர்முதல் கடைநிலை ஊழியர் வரை பழகும் வாய்ப்பு கிட்டியது. அனைவருடனும் அன்புடன் பழகுவார்.

1970ம் ஆண்டு அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணம் வந்ததும் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் முழுநேர தொண்டனாக சேவை செய்து வந்தார். சேர் பொன். இராமநாதன் வீதியில் தற்போது ஆலவிருட்சமாக அமைந்திருக்கும். ஸ்ரீ சத்யசாயி பாபாவின் மண்டபம் அமைய பெரிதும் பாடுபட்டார். வேதவிற்பன்னர்களே வியக்கும் வண்ணம் இவரும் இவரது உடன் பிறப்பான திரு. இராஜதுரை ஐயா அவர்களும் சமஸ்கிருத சுலோகங்களை ஓதுவார்கள். இருவரது வெற்றிடங்களும் என்றென்றுமே நிரப்ப முடியாதவை.

இவரது குடும்பம் கொழும்பில் இருந்து 1956ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தபின் இவர் கொழும்பில் திருவாளர் டாக்டர் து.நல்லைநாதன் அவர்களின் வீட்டில் தங்கி இருந்தார். அவர்களுடன் தங்கி இருந்த காலத்தில் அவர்களுடைய குடும்ப அங்கத்தவராகவே மாறிவிட்டார். திரு. நல்லைநாதன் ஐயா அவர்களின் பிள்ளைகள் இவரை மாமா, மாமா என அன்புடனும் உரிமையுடனும் அழைப்பார்கள். இவர் அமரரான செய்தி அறிந்ததும் நல்லைநாதன் ஐயா அவர்களின் பிள்ளைகள் தெரிவித்த அனுதாபங்கள் சொல்லில் அடங்கா.

பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்ப உண்டேல் இறைவா உன்னை என்றும் மறவாமை வேண்டும். இப்பிறப்பிலே இறைவனை என்றும் மறவாது வாழ்ந்தவருக்கு நிட்சயம் மீண்டும் பிறவாமை இல்லை. அவரது ஆன்மா எல்லை இல்லாத ஆனந்த சாகரத்தில் மூழ்கி அமைதி பெற்றுவிடும் என்பது நிட்சயம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருவலிவலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தன தடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## பஞ்சபுராணம்

## தேவாரம்

பண் – கொல்லி | திருஞானசம்பந்தர் | (3ம் திருமுறை)

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

## திருவாசகம்

மாணிக்க வாசகர் (8ம் திருமுறை)

வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்றுண் டேன்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

திருமாளிகைத் தேவர் (9ம் திருமுறை)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றோ!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தெண்டனேன் விளம்புமா விளம்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேந்தனார் (9ம் திருமுறை)

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ லகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

## பெரிய புராணம்

சேக்கிழார் (12ம் திருமுறை)

ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமேயாக
இந்தவாழ் சடையானாடும் ஆனந்த
வெல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

அருணகிரிநாதர் (8ம் திருமுறை)

துள்ளுமதவேள் கைக்கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ள வருசோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலேனே
வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீராம ஜெயம்

**Arul Valar Sri Sunthara Aanchaneyar Kovil**

**அருள் வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில்**


Sivasri R. Sunthareswara Kurukkal
Governing Authority & Chief Priest

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்

Regd. No.
பதிவு இல. } ..................

Commercial Bank,
Jaffna Branch.Saving A/C No.

Maruthanarmadam, Inuvil, Chunnakam, Jaffna, Sri Lanka.


# ஆத்மசாந்தி உரை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்
தெய்வத்துள் வைக்கப்படுவார்" என்பது வள்ளுவர் வாக்கு.

திருவாளர் உமாபதி கந்தசாமி அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன். கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அவர் என்னுடன் பழகிவந்தார். ஆழ்ந்த அறிவும், இறைசிந்தனையும், ஸ்ரீ சாயிபாபாவிடம் அளவிலாத பக்தியும் கொண்டவர்.

என்னுடன் அளவளாவும் பொழுது மந்திரங்களை கூறி பொருள் கேட்பார். சிலேடையாகக் கதைத்து மற்றவர்களை மகிழ்விப்பார்.

இப்படிப்பட்ட பெரியாரை இழந்து துயருறும் குடும்பத்தினர், மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் குறிப்பாக திரு.மார்க்கண்டு அவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆன்மா சிவபதமடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்.**
**ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# நண்பர் உமாபதி கந்தசாமி

எம்மைவிட்டுப் பிரிந்த கந்தசாமி அவர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் இருக்கும் சத்திய சாயி நிறுவனங்களுக்கு ஓர் பெரிய தூண்போல் விளங்கினார். ஒரு பெரிய சமித்தியிலே நிர்வாகத்திறன் இல்லாதவர்கள் தலைமைப்பதவிகள் வகிப்பது மிகவும் கஷ்டம். பலதரப்பட்ட துறைகளில் கருமங்கள் நடைபெறும். பஜனை என்பது ஒரு பகுதி மாத்திரமே. மாதாந்த நிர்வாகக் குழுக் கூட்டம் (Management Committee) கிழமை தோறும் நடைபெறும் காரியக் குழுக் கூட்டம் (Executive Committee), விசேட கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் உரியவர்களின் ஆலோசனையோடு செயல் திட்டங்களைத் தயாரித்து நடத்துவது, தொண்டர்களின் உதவியுடன் சமித்தி மண்டபத்தையும் வளவையும் சுத்தமாகவும், புனிதமாகவும் வைத்திருப்பது, சமித்திக்குரிய பொருட்களுக்கு பாதுகாவலர்களை ஒழுங்கு பண்ணுவது, விசேட பேச்சாளர்களை அழைப்பது, நூலகத்தின் நிர்வாகம், புத்தக விற்பனை ஒழுங்குகள் இப்பேற்பட்ட பலதரப்பட்ட கடமைகளை தலைமைதாங்கி நடத்துவது உத்தியோகத்தவர்களின் கடமையாகும். கந்தசாமி அவர்கள் சமித்தித் தலைவர் பதவி மாத்திரம் அல்ல வெவ்வேறு பதவிகள் வகித்த பொழுதும் தன்கடமைகளை சிறப்பாகச் செய்தார்.

மகளிர் பிரிவு, இளைஞர்பிரிவுகளில் வழிகாட்டியாக இருக்க வேண்டியது தலைவரின் முக்கிய கடமைகளில் ஒன்று. கந்தசாமி அவர்கள் சமித்தியின் உடைய முக்கிய பேச்சாளர்களில் ஒருவராகவும் விளங்கி வந்தார்.

யாழ்ப்பாண சமித்திக்கு பெரிய வளவுண்டு. அங்கு பக்தர்களுடைய கண்களைக் கவரக் கூடியதாக பலதரப்பட்ட பூமரங்கள் பழவகை மரங்கள், அர்ச்சனைக்குரிய இலைவகைகள் அவரால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் நட்டு, தன்கையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்பாய்ச்சி பெருமையுடன் வளர்த்தார். இந்த மரங்களைப் பார்க்கும் பொழுது கந்தசாமி அவர்களின் ஞாபகம் எங்களுக்கு எப்போதும் வரும்.

ஒரு சாயிபக்தன் எவ்வாறு தன்னுடைய வாழ்க்கையை நடத்த வேண்டுமோ அவ்வாறு வாழ்ந்து காட்டியவர். கந்தசாமி அவர்கள் எவரையும் அன்புகாட்டி அரவணைக்கும் பண்பு அவரிடம் நிறையவே இருந்தது. பதவி வகிக்கும் உத்தியோகத்தவர்கள் இவருடைய இந்தச் சிறந்த குணத்தை பின்பற்ற முயல்வது மிகவும் வேண்டத்தக்கது.

சமித்தியின் கல்வி வட்டத்திலே தவறாது பங்கு பற்றியவர்களில் ஒருவர் கந்தசாமி அவர்கள். இந்தக் கல்வி வட்டத்தை வழிநடத்துபவர் என்ற முறையில் அவரின் பங்களிப்பைப்பற்றி நான் கூறுவதற்கு வாய்ப்புண்டு. பகவானுடைய போதனைகளைப்பற்றி கருத்துக்களைப் பரிமாறும் போது பொருத்தமான தேவார திருவாசகங்கள் இடைக்கிடை கூற வேண்டிவரும். அப்பொழுது கந்தசாமி அவர்களைத் திரும்பிப் பார்த்தவுடன் பொருத்தமான கோட்பாடுகள் அவரிடமிருந்து வரும். இந்தப் பங்களிப்பை கல்வி வட்டத்தில் உள்ளவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்.

விசேட தினங்களில் சமித்தியில் பாதபூசை, ஹோமம் ஆகியவை செய்வது வழக்கம் இதற்குப் பொறுப்பாயிருந்து செய்பவர் கந்தசாமி அவர்கள்தான். இவருக்கு உதவியாக இருந்து சமஸ்கிருத ஸ்லோகங்களை சொல்லிக்கொண்டு வந்த இராசதுரை அவர்கள் இவருக்கு முன்னே அமரராகிவிட்டார். தத்துவ விளக்கங்களோடு இந்தப் பூசையை சமித்திகளில் முறையாகச் செய்யக்கூடியவர் கந்தசாமி அவர்கள் தான். இப்போ கந்தசாமி அவர்கள் இல்லை. சமித்தியிலே பாதபூசையும் நின்றுவிடப் போகின்றது.

கந்தசாமி அவர்கள் நித்திய சிவபூசை செய்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி தீட்சை பெற்றவர். ஒவ்வொரு முறையும் நான் புட்டப்பர்த்திக்குப் போய் வரும் போது தவறாது அவருக்கு குறைந்தது இரண்டு நூறுகிராம் விபூதி பக்கற்றுக்கள் பிரசாதமாகக் கொண்டு வருவது வழக்கம். இதைவந்து பயபக்தியுடன் பெற்றுக் கொள்வார். சத்திய சாயி நிறுவனங்களை விட வேறு ஆத்மிக சம்பந்த முடைய நிறுவனங்களிலும் அவருடைய சேவையின் பங்களிப்பு இருந்தது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் நம்பிக்கை நிலையத்தின் இயக்குனர் சபையில் பலவருடங்களாக சேவை செய்தார். இதைத்தவிர யாழ்ப்பாண வேதாந்த மடம், சுவாமி இராமதாசர், யோகசுவாமிகள், சிவதொண்டன் போன்ற நிலையங்களிலும் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளார்.

உமாபதி கந்தசாமி அவர்களின் ஆழுமையின் ஆட்சி முடிந்துவிட்டது. அவரிடமிருந்து படிக்க வேண்டிய பலகாரியங்கள் உண்டு. அவற்றைப் பின்பற்றி ஒழுகுவதுதான் நாங்கள் அவருக்குச் செய்யும் சிறந்த கைமாறாக அமையும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

40, வைமன் வீதி
யாழ்ப்பாணம்.

**செ.சிவஞானம்**
**இலங்கை சத்திய சாயி நிறுவனங்களின்**
**ஆலோசகர்,**
**இளைப்பாறிய அரசாங்கஅதிகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய்ராம்

# சிவநேயச் செல்வர்



அண்மையில் சிவபதமடைந்த பெரியார்.திரு.உ.கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து எழுதுவதும் சிவ சிந்தனையேயாகும். அவரை நான் 1954ம் ஆண்டிலிருந்து அறிவேன். முதன் முறை அவரைக் கண்டது காலஞ்சென்ற பெரியார் திரு.க.ராமச்சந்திரா அவர்கள் வசித்துவந்த கொள்ளுப்பிட்டி இல்லத்தில். அந்த வீட்டில் நடந்த பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஒரு நாள் கிடைத்தது. அந்தப் பிரார்த்தனை வைபவத்தில் திரு.கந்தசாமி அவர்கள் ஹோமம் வளர்த்து பூசைசெய்து கொண்டிருந்ததைக் கண்டேன். அதே ஆண்டு கார்த்திகை மாசம் பௌர்ணமி தினத்தில் திருவாளர்கள் கந்தசாமியும் ரத்தினவடிவேல் அவர்களும் சுவாமிராமதாஸரிடம் மந்திர தீட்சை பெற்றுக் கொண்டபொழுது கொள்ளுப்பிட்டி சிந்தி Comunity Centre ல் இரண்டாவது தடவையாகப் பார்த்தேன். அன்றுதான் நானும் சுவாமி ராமதாசரிடம் மந்திர உபதேசம் பெறும் பாக்கியமடைந்தேன்.

திருவாளர்கள் கந்தசாமி, ரத்தினவடிவேல், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் போன்ற பல அடியார்கள் காலஞ்சென்ற பெரியார் ராமச்சந்திராவின் தலைமையில சத்சங்கம் என்ற அமைப்பில் இயங்கி வந்தார்கள். சுவாமி ராமதாசர் வருகைக்கு பின் பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியார்களுடன் என்போன்ற வயதில் குறைந்த புத்தடியார்கள் பலரும் இணைந்து கொண்டோம். திரு. ரத்தினவடிவேலர் அவர்களின் வழிகாட்டலில் யோகர் சுவாமி - திருவடி வழிபாடு வாரந்தோறும் நடைபெறும்.

யோக சுவாமியின் பாடல்களைப் பாடி நடைபெற்றுவந்த இவ் வழிபாட்டில் திரு கந்தசாமி அவர்களே அபிசேகம், பூசைபோன்றவற்றைச் செய்வது வழக்கம். அவர் செய்யும் ஆராதனையில் ஓர் அழகு, ஒழுங்குமுறை, சீர் சிறப்பு மேலோங்கி நிற்கும். அவர் காலஞ்சென்ற டாக்டர் நல்லைநாதன் அவர்களின் உறவினர். டாக்டருடைய வாசஸ்தலத்திலேயே வசித்து வந்தார். டாக்டரும் யோகசவாமிகளுடைய அடியவராக இருந்த காரணத்தால் வாரந்தோறும் நடைபெற்று வந்த திருவடி பூசையை-மாத இறுதியில் வரும் வாரத்தில் தனது இல்லத்தில் நடாத்த வேண்டுமென்று திரு கந்தசாமி மூலம் வேண்டுதல் விடுத்து அவ்வாறே மாத இறுதி வாரப் பூசை டாக்டர் வீட்டிலேயே நடைபெற்று வந்தது. திரு. கந்தசாமி அவர்கள் சிறப்பாக பூசை செய்வதால்- நாங்கள் அவரை மஹா சந்நிதானம் என்று அன்பாக அழைப்போம்.

இவ்வாறு நடைபெற்று வந்தவேளையில்த் தான் டாக்டர் நல்லைநாதன் ஒரு முறை ஸ்ரீ சத்திய சாயிபாபா பற்றியும், அவர் செய்யும் பல அற்புதச் செயல்கள் பற்றியும் எங்களிடம் பிரஸ்தாபித்தார். தொடர்ந்து ஓரிரு மாதங்களில் காலஞ்சென்ற திரு.தியாகராசா அவர்களுடன் எங்களையும் சேர்த்து கொழும்பில் ஒரு சத்தியசாயி சமித்தியை ஆரம்பித்தார்கள். வாரந்தோறும் நடைபெற்ற சாயி பஜனைகளில் நாங்களும் பங்குபற்றி வந்தது மட்டுமல்லாமல் திரு. நல்லை நாதனின் வீட்டில் மாத இறுதி வாரத்தில் நடைபெற்ற திருவடி வழிபாட்டையும் சாயி பஜனையோடு சேர்த்து செய்துவந்தோம். திரு.கந்தசாமி அவர்களே திருவடி பூசையையும், தீப ஆராதனை போன்றவற்றையும் செய்து வந்தார். இன்றும் அந்தப்பூசை நடைபெற்றுவருகிறது. சமித்தியின் ஆரம்பகாலத்திலிருந்து, சிவபதம் அடையும்வரை சாயி சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் திரு. கந்தசாமி அர்வகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஓய்வுபெற்று யாழ்ப்பாணம் சென்றபின்பும் கொழும்பில் நடைபெறும் பகவானின் பிறந்ததின நிகழ்ச்சிக்காக விசேசமாக வரவழைக்கப்படுவது வழக்கமாகப் பலகாலம் நீடித்தது.

1983 ல் நடைபெற்ற அசம்பாவிதங்களால் நானும் யாழ்ப்பாணம் மாற்றல் கேட்டு பலவருடங்கள் யாழ் நகரில் பணிபுரியவேண்டியிருந்தது. அவ்வேளைகளில் திரு.கந்தசாமி அவர்களுடன் பல பிரார்த்தனை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறேன். ஒரு நிகழ்ச்சி என் மனத்தில் ஆழப்பதிந்து விட்டது.

யாழ்ப்பாணத்தில் கோட்டையில் படையினர் சிக்கிக் கொண்ட சமயம், அவர்களை மீட்கும் முயற்சியில் பல கட்டிடங்கள் குண்டுவீசி தகர்க்கப்பட்டன. சுன்னாகம் மின்சார நிலையமும் தகர்க்கப்பட்டு யாழ் நகர் இருளில் மூள்கியிருந்தது. மின்சார பாவனை இல்லாமல் நெல் குற்றும் மில்லுகள் முடங்கிக் கிடந்தன பிற மாவட்டங்களிலிருந்து நெல்லுக் கொள்வனவும் நின்றுவிட்ட நிலையில் யாழ் நகரில் அரிசிக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவியது. பஞ்சம் நிலவிய இக்கால கட்டத்தில் நல்லூர்க் கந்தசாமி கோவில் உற்சவ நாட்கள் 2 -5லும் அன்னதானம் செய்ய வேண்டுமென்று எனது மருமகன் பரமலிங்கம் விரும்பி அதற்கான செலவுகளையும் ஏற்றுக்கொண்டார். மிக அற்புதமான முறையில் தேவையான அரிசியும், தட்டுப்பாடாக இருந்த விறகும் கிடைக்கப்பெற்றன. அன்னதானம் ே காவில் ே மற்கு வீதியிலிருந்த மடத்தில ஏற்பாடாகி இருந்தது. நானும் திரு. கந்தசாமி அவர்களும் சமையல் முடிந்ததும் ஹோமம் வளர்த்து அன்னத்தை அக்கினியில் ஆகுதி செய்து, அதன்பின்புதான் பூசையில் நிவேதித்து தானமாக வளங்கிவந்தோம். ஒருநாள் ஹோமந் தொடங்கி சில நிமிடங்கள் ஆகியிருக்கும். திடீரென கோவில் முன்பிருந்த மாநகரசபைக்கட்டிடங்கள் குண்டுவீசி தகர்க்கப் படுகின்றன. கோவிலின் பின்பக்கமிருந்த அன்னதான மடம் விமானங்கள் தாளப்பறந்து அட்டகாசம் பண்ணும்போது, அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய கட்டிடம் அதிர்வினால் எங்கள் தலைமேல் விழுந்து விட்டதாகத்தான் உணர்கிறோம். சிறு கல்லுகள், தூசுகள் எங்கள் மேல் பட, பட வென்று வீழ்ந்துகொண்டிருக்கின்றன. எங்களைச் சூழ இருந்தவர்கள் போன இடமே தெரியவில்லை. அன்னதானத்திற்காக குழுமியிருந்தவர்கள் எவரையும் அங்கு காணவில்லை. ஒரு காகம் குருவிகூட இல்லை விமானங்களின் இரைச்சல் காதுகளை செவிடுபட வைக்கின்றன. திரு. கந்தசாமி அவர்கள் எதுவுமே நடக்காதது போன்று மனங்குவிந்த நிலையில் ஹோமத்தை வளர்த்து ஆகுதி போட்டவண்ணம் இருக்கிறார். அவர் இருக்கின்ற தென்பில் நான் மந்திரங்களைச் சொல்லுகின்றேன். எந்த அவசரமோ பயமோ அங்கு காணப்படவில்லை. ஹோமம் நிறைவு பெறுகிறது. விமானங்களும் தங்கள் வேலையை முடித்துத் திரும்புகின்றன. தினமும் சிவ பூசை செய்து வந்த மனதின்பால் ஏற்பட்ட திட சித்தமும், நம்பிக்கையுமே அந்த சிவ நேயச் செல்வரின் வெளிப்பாடாக இருந்ததை அவரருகிலிருந்து அனுபவிக்கும் பாக்கியம் அன்று என்குக்கிட்டியது.

திரும்பவும் கொழும்புக்கு மாற்றலாகி 1991ல் வந்துவிட்டேன். 12 வருடங்கள் யாழ்ப்பாணம் போக்குவரத்து சீரற்ற நிலையில் பயணிக்கமுடியவில்லை. திரு.கந்தசாமி அவர்கள் கொழும்பு வரவும், இந்தியா சென்று தனது குருவின் வழித்தோன்றலாகிய சுவாமி சச்சிதானந்தரை ஒரு முறையாவது தரிசிக்க வேண்டுமென்ற அவாவை, பல கடிதங்களிலும் தொலைபேசியிலும் தெரிவிப்பார். அவருடைய ஆசையும் நிறைவேற காலம் வந்தது.

கொழும்பில் எங்கள் குருநாதன் சுவாமி ராமதாசரின் நினைவாக ஆனந்தசாகர என்ற கட்டிடத்தொகுதி 'ராமதாசர் அறக்கட்டளை மூலம் நிறுவப்பட்டது. அதன் திறப்பு விழாவில் பங்கேற்பதற்காக சுவாமி ராமதாசரின் வாரிசும், இன்றைய ஆனந்தாஸ்ரமத்தலைவருமாகிய சுவாமி சச்சிதானந்தா அவர்கள் தனது தள்ளதாத வயதிலும், 2000ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகைதந்தார். இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திரு.கந்தசாமி அவர்கள் கொழுமபுக்கு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தோம். அவர் கொழும்பு வந்து, 'ஆனந்தசாகராவில்' பல நாட்கள் நின்று தன்பிரியமான நண்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர்கள் பலரையும் சந்தித்தார். தான் தரிசிக்க வேண்டுமென்று ஆவலாக இருந்த சுவாமி சச்சிதானந்தா அவர்களுடைய அன்பையும், அருளையும் பெற்றார். எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போன்று தன் குரு பரம்பரையில் வந்த மகான் ஒருவரினால் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டார்.

திரு.கந்தசாமி அவர்களை திரும்பவும் யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் அக்டோபர் மாதம் சந்தித்தேன். யாழ்ப்பாணம் கரந்தனி(நீர்வேலி)லும், நல்லூர் அரசடி வீதியிலும் சிறுவர் இல்லங்கள் (ஆண்களுக்கும், பெண்களுக்கும்) அமைக்கும் பணி சம்பந்தமாக யாழ் வந்திருந்தேன். எனது மருமகன் திரு. பரமலிங்கமும் என்னுடன் வந்திருந்தார். திரு.கந்தசாமி அவர்கள் எங்களைக்காண வந்திருந்தார். கட்டிட கல் நாட்டு விழாவில், தனது பூசை அறையில் இடது பக்கமாக வைத்திருக்கும் சுவாமி ராமதாஸரின் அஸ்தியையும், அவரின் பாதம் ஒற்றிய துணி ஒன்றையும் எடுத்து புனிதச்சின்னங்களாக அவ்வைபவத்தில் அத்திவாரத்தில் வைக்கும்படியும் சொன்னார். அதற்கு மருமகன் நீங்கள்தானே வைபவத்தை நடாத்துவீர்கள். அப்பொழுது வையுங்களேன் என்று கூறினார். அவர் குறிப்பாகச் சொன்ன விபரத்தை எங்களால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை. அச் சந்திப்புத்தான் எங்கள் கடைசி சந்திப்பு என்பதை அவர் அறிந்திருந்தார். எங்களுக்குத்தான் புரியவில்லை.

2003ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ந்தேதி அடிக்கல் நாட்டு விழாவிற்கு ராமகிருஷ்ணமிசன் தலைவர் சுவாமி ஆத்கணானந்திஜி யாழ் வருகிறார்.

திரு.கந்தசாமி அவர்கள் அங்கு இல்லை. அவர் விட்டுச்சென்ற புனித சின்னங்கள் அந்த வெற்றிடத்தை அலங்கரிக்கும்.

**அ. சீவரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திடீர் என்று அணைந்த தீப ஒளி
# உமாபதி கந்தசாமி ஐயா அவர்கள்.

சிவபூசை செய்து வருபவர்
பக்தி, பண்பு பணிவுடைய ஐயா அவர்களின் மறைவு தமிழ் மக்களுக்கும் சைவத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

25.01.88 திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள் திருவடி எய்தினார். அன்று அவர்களின் இறுதி கிரியைகளை சுவாமிகளுக்கு செய்யும் முறைப்படி பக்திபூர்வமாக செய்தவர்.

28.03.88 சுவாமிகள் பிறந்த தினத்தன்று மறவன்புலவு நினைவு மண்டபத்தில் சுவாமியின் அஸ்தி வைத்து கட்டி நினைவாலயமாக மிளிரச் செய்தவர்.

அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் குறித்த நினைவாலயத்தில் அபிஷேகம், பிரார்த்தனை செய்து, அமுது வழங்கி வந்தார். சுவாமி பெயரில் சபையை அமைத்த முதல்வர் அவரே.

இறையடி சேர்ந்த ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ கௌரியம்மாள் சமேத திருக்கேதீஸ்வரப் பெருமானை அடிபணிந்து நிற்கின்றோம்.

திருக்கேதீஸ்வரம் திருவாசகம்,
ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்,
தொண்டர் சபை.

த.துரைராசா,
செயலாளர்,
18.12.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# எம் இதயத்தில் சமாதி கொண்ட கந்தசுவாமிகள் புவி யாத்திரையின் இறுதிவார நிகழ்வு

அன்று 2002.12.08 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.45 சத்சங்கம் சுவாமிகளின் ஓங்காரத்துடன் ஆரம்பம். அன்புக்குரிய செல்லையா சிவஞானம் ஐயா அவர்கள் நிலையத்தில் 05ம் திகதி வியாழக்கிழமை பகவானுடனான அனுபவம் என்னும் விடயத்தில் பஜனையின் பின் உரையாற்றிய உலக வங்கியாளர் ஸ்ரீமதி கமலாம்பிகை ரங்கநாதன் அவர்கள் குறிப்பிட்ட “தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை” என்ற மாணிக்கவாசகரின் அநுபோக இலக்கணமான கோயிற்திருப்பதிகத்தின் இறுதி திருவாசகத்தின் உட்பொருளை வேண்டி நிற்க இலகுவாக அந்திருவாசகத்தினைப்பாடி அதன் பொருளையும் அருளுரைத்தார் உ.கந்தசாமி ஐயா.

அன்று பகவானின் நாம பஜனையின்பின் உரையாற்றிய சுவாமிகள் 2002.12.13தினம் நிலையத்தில் ஆரம்பமாகும் 7நாள் தொடர் நிகழ்வான ஸ்ரீமத் பாகவத மஹாபுராணம் வாசித்தல் தொடர்பில், இறைவனின் எண்ணிலடங்கா அவதாரங்களின் தொன்மைகளையும் தன்மைகளையும், லீலைகளையும் விளக்கும்பாகவதத்தினை வாசிப்போர், கேட்போர் அடையும் இகபரசுகங்களையும் விளக்கினார். பிரசாந்தியின் நிகழ்வுகளில் “நவராத்திரி” பாகவதம் வாசித்தல் இடம் பெறுவதனையும் குறிப்பிட்டார்.

பின் பாகவதம் வாசித்தல் தொடர்பான ஆலோசனை வழங்குவாதற்காக எம்மை தமது “உமாபதி” இல்லத்திற்கு வருகை தருமாறு அழைத்தார்.

அழைப்பினை ஏற்று 2002.12.12. வியாழக்கிழமை பகவானின் நாம பஜனையின்பின் மாலை 5.45ம் மணிக்கு அவர் இல்லம் சென்றோம். மறுதினம் ஆரம்பமாகும் ஸ்ரீமத் பாகவதம் வாசித்தல் நிகழ்வில் கலந்துகொள்ள இயலாமையை விளக்கி, முகுந்தனின் நாமங்களை முறையாக ஒருவர் ஓதக்கூடிய சூழலின்மையினால் பகவானின் அஷ்டோத்தரங்களைக்கூறி பாதபூசை செய்தபின், வாசுதேவனின் முன் நிறைகுடம் வைத்து பூசை செய்து பாகவதம் வாசித்தலை ஆரம்பிக்கும் வண்ணமும் சுவாமி பாபாவிடை கொடுத்தால் பாகவத பூர்த்தி நிகழ்விற்கு (2002.12.19) வருவதாகவும் தமது இருக்கையில் இருந்தவாறு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளை நிலையபொருளாளர் திரு.மு.க.திருலோகநாதன் அவர்கள் வருகைதந்தார். முகப்புத் தோற்றத்தில் இடம் பெறுவதான சர்வேஸ்வரர்களின் உருவங்களின் நிரலில் விநாயகரை முன்னிருத்துவதில் 2002.10.15 விஜயதசமியன்று வெற்றி கண்ட சுவாமிகள் அத்திருப்பணியில் அயராது பகவான் வகுத்த பாதையின் வழி செயற்பட்டார். அப்பணிக்கு காசோலை ஒன்றில் கையொப்பம் பெற வருகை தந்த பொருளாளருடன் அன்புருக கதைத்து கண்ணாடியை எடுத்துவர வீட்டினுள் மேல்புறமும், பின் திடமான இடத்தில் வைத்து கையொப்பமிட வீட்டினுள் வடபுறமும் சென்று காசோலையில் கையொப்பமிட்டுத் தந்தார். முகப்புத் தோற்ற அழகினை இதயத்தில் பதித்த வண்ணம் சுவாமிகள், பகவானுக்கே தமது யாத்திரையின் இறுதிப்பணியை நிறைவேற்றினார்.

மறுதினம் உதயன் பத்திரிகை அறிவித்தலைத் துணைவியார் காட்டியபோது எம்மால் அதனை நம்ப முடியவில்லை. எமக்கோர் சமாதி அமைக்க வேண்டும் என சாகஸமாகக் கூறிவந்த சுவாமிகள் எம்முள் என்றும் வியாபித்திருக்கின்றார்.

சமஸ்கிருத சுலோகங்கள் ஒலிக்க முறைவழுவாது பாதபூஜைகளையும், ஹோமங்களையும் நிறைவு செய்கின்ற பரிபூரணர்களான இராசதுரை ஐயாவும் கந்தசுவாமிகளும் பத்து மாதத்திற்கு பத்து நாள் இருக்கையில் ஒன்றித்துவிட்டார்கள்.

அன்பே உருவான நித்திய சத்தியமான பகவானுக்கு அகத்தூய்மையுடன் "அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" என்றபடி பூவிட்டு வழிபட்டு ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"லோகா சமஸ்தா சுகினோபவந்து"

**சுவாமியின் அன்பின் அடியவன்,**
**மு.க.முருகையா,**
**ஆத்மீக இணைப்பாளர்.**

**'ஸ்ரீ சாயி சர்வேஸ்வரம்'**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயத்திரி மந்திரம்: ஓம் பூர் புவஸ்ஸுவ
தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமகே
தியோ யோநப்பிரசோதயாத்



# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவரின் மறைவை ஒட்டி அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அநுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொண்டோருக்கும் பிற வழிகளில் உதவி ஒத்தாசை செய்தோருக்கும் எமது நன்றியை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

12.01.2003 குடும்பத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SSR Com. Offset & Screen, 288 B, Palaly Rd, Kandarmadam, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org